30th July 1962]

Assam or Government of India during the period of deputation of Battalion. The year-wise particulars of amounts reimbursed are furnished below.:—

						RS.
1957–58	...	...	...	...	...	12,85,700
1958–59	...	...	...	...	...	15,30,800
1959–60	...	...	...	...	...	13,55,657
1960–61	...	...	...	...	...	14,14,356
1961–62	...	...	...	...	...	1,36,876

Elections to Panchayats and Panchayat Union Councils

* 796 *Q.*—SRI G. RAJARAM : Will the Hon. the Chief Minister be pleased to state when the elections to Panchayat Boards and Councils are likely to be conducted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The question of fixing the dates for the next ordinary elections to all panchayats is under the consideration of the Government. The question of fixing the dates of the next election of members to Panchayat Union Councils will be considered in that connection.

திரு. ஜி. ராஜாராம் : நடைமுறையில் இருக்கின்ற தேர்தல் முறையிலே ஏதாவது மாறுதல்கள் செய்ய அரசாங்கத்துக்கு எண்ணம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது அத்தகைய உத்தேசம் ஒன்றுமில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களும், வெவ்வேறு கால கட்டத்தில் அமைக்கப் படுகின்றன. ஒவ்வொன்றிற்கும் ஐந்தாண்டு காலம் பூர்த்தியாகி விட்டாலும், வேறு கால கட்டத்தில்தான் தேர்தல் வரும். இவற்றையெல்லாம் முறைப்படுத்தி ஒரே வருடத்தில் பஞ்சாயத்து களுக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் தேர்தலை நிர்ணயிக்க சர்க்கார் வழிவகை செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இதுபற்றி விவரம் கொடுத்திருக்கிறேன். ஒரு ஆண்டுக்குள்ளாகவே வெவ்வேறு தேதியாக இருக்கிறது. எல்லாவற்றையும் ஒரே தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்றால், அது பரிசிலனை செய்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது.

ஸ்ரீ. ஏ. ராகவ ரெட்டி : ஏற்கெனவே ஐந்து வருடங்கள் முடிவடைந்த பஞ்சாயத்துகளுக்கு எப்பொழுது தேர்தல் நடைபெறும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லா விஷயங்களும் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றன.

திரு. ஏ. கே. சுப்பையா : கனம் அமைச்சர் அவர்கள் கூறுகின்ற போது பஞ்சாயத்துத் தேர்தலையும் பஞ்சாயத்து யூனியன் தேர்தலையும் ஒரே சமயத்தில் நடத்துவதற்கு முடியாது போலத் தோன்றிற்று. ஏன் முடியாது, அவ்வாறு செய்வது சௌகர்யமாக இருக்குமல்லவா ?

கனம் திரு. பக்தவத்சலம் : பஞ்சாயத்துத் தேர்தல், பஞ்சாயத்து அங்கத்தினர்களைத் தேர்தெடுப்பதற்காக நடத்தப்படுவது. பஞ்சாயத்து அங்கத்தினர்கள் அதற்கப்புறம், இப்போதுள்ள விதிகளின்படி பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்தெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இரண்டையும் ஒன்றாக நடத்த முடியாது.

திரு. பி. ஜெயராஜ் : பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் பொது மக்களாலேயே தேர்தெடுக்கப்படும்படியாகச் செய்வதற்கு அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி இந்த மன்றத்தில் கூறப்பட்டது. இதுபற்றி பரிசீலனை செய்யப்படுகிறபொழுது எல்லாவற்றையும் கவனிக்கலாம்.

சொத்துக்களின்மீது வரிவிதித்தல்.

* 797 கேள்வி.—**திரு ஆ. கு, சுப்பையா :** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்யத்திலுள்ள நகர சபைகளுக்குச் சொத்து வரியை உயர்த்தும்படி சர்க்கார் உத்திரவிட்டுள்ளதா ? விவரமென்ன ?

THE HON. SRI S. M. A. MAJID : No, Sir.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : அரசாங்கம் உத்தரவு போடாவிட்டாலும் வீட்டு வரியைக் கணிசமான அளவு உயர்த்தவேண்டுமென்ற யோசனையைக் கூறியிருக்கிறார்களா ? வீட்டு வரியின் மூலம் அவர்கள் கணிசமான அளவு வருமானத்தை உயர்த்திக் கொண்டால் தான் மேற்கொண்டு அரசாங்கம் உதவி செய்யும் என்ற நிலைமை உண்டாக்கியிருக்கிறார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : மெட்ராஸ் முனிஸிபல் ஆக்ட் 1920, ஷெட்யூல் 8-ஆவது படி அதைச் செய்யவேண்டுமென்று பொதுவான விதியில் இருக்கிறதே தவிர கனம் அங்கத்தினர் சொன்ன மாதிரி ஒன்றும் இல்லை.

Motor Vehicles Tax

* 798 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that a portion of Motor Vehicle Tax was paid to the District Boards when they were in existance; and

(*b*) whether the Government propose to pay a portion of the tax to the Panchayat Union Councils constituted in the place of the District Boards?